# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE

REACHING NATIONS

*India's National Spiritual Newspaper*

**Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN**

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: SIS. SERENA BEVIN

**Vol. XXVIII** JULY 2023 **No. 07**


## பரிசுத்த வேதாகமம்



இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

### ஏசாயா 49:1-6

1. தீவுகளே, எனக்குச் செவிகொடுங்கள்; தூரத்திலிருக்கிற ஜனங்களே, கவனியுங்கள்; தாயின் கர்ப்பத்திலிருந்தது முதல் கர்த்தர் என்னை அழைத்து, நான் என் தாயின் வயிற்றில் இருக்கையில் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தினார்.
2. அவர் என் வாயைக் கூர்மையான பட்டயமாக்கி, தமது கரத்தின் நிழலினால் என்னை மறைத்து, என்னைத் துலக்கமான அம்பாக்கி, என்னைத் தமது அம்பறாத்தூணியிலே மூடி வைத்தார்.
3. அவர் என்னை நோக்கி: நீ என் தாசன்; இஸ்ரவேலே, நான் உன்னில் மகிமைப்படுவேன் என்றார்.
4. அதற்கு நான்: விருதாவாய் உழைக்கிறேன், வீணும் வியர்த்தமுமாய் என் பெலனைச் செலவழிக்கிறேன்; ஆகிலும் என் நியாயம் கர்த்தரிடத்திலும், என் பலன் என் தேவனிடத்திலும் இருக்கிறது என்று சொன்னேன்.
5. யாக்கோபைத் தம்மிடத்தில் திருப்பும்படி நான் தாயின் கர்ப்பத்திலிருந்தது முதல் கர்த்தர் தமக்குத் தாசனாக என்னை உருவாக்கினார்; இஸ்ரவேலோ சேராதே போகிறது; ஆகிலும் கர்த்தருடைய பார்வையில் கனமடைவேன், என் தேவன் என் பெலனாயிருப்பார்.
6. யாக்கோபின் கோத்திரங்களை எழுப்பவும், இஸ்ரவேலில் காக்கப்பட்டவர்களைத் திருப்பவும், நீர் எனக்குத் தாசனாயிருப்பது அற்பகாரியமாயிருக்கிறது; நீர் பூமியின் கடைசிபரியந்தமும் என்னுடைய இரட்சிப்பாயிருக்கும்படி, உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன் என்கிறார்.

# தெரிந்தெடுப்புகள்!

## CHOICES!



சகோதரி ஏஞ்சலின் செல்வகுமாரி

நமது அன்றாட வாழ்வில் அநேக காரியங்களைத் தெரிந்தெடுக்கிறோம். ஒவ்வொரு தெரிந்தெடுப்பிற்குப் பின்னால், அதன் விளைவு காணப்படும். அவற்றில் சில முக்கியமானவை; சில முக்கியமல்லாதவை. நமது வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுப்பது, அல்லது நமது தொழிலின் பாதையைத் தெரிந்தெடுப்பது போன்றவை நம் வாழ்க்கையையே மாற்றக் கூடியவையாகும். நாம் எதை உடுக்க வேண்டும். அல்லது எதை உண்ண வேண்டும் போன்ற தெரிந்தெடுப்புகள் சாதாரணமானவை. தேவன் மனிதனை உருவாக்கியபோது அவனை சுயசித்தம் உள்ளவனாய் உருவாக்கினார். ஆகவே, மனிதர்களால் நல்லதையோ, கெட்டதையோ தெரிந்தெடுக்க முடியும். தேவன் தமது வழிகாட்டுதல்களையும், எதிர்பார்ப்புகளையும் நம் முன் வைக்கிறார். ஆனால், அவரது விருப்பத்தை நாம் தெரிந்தெடுக்க ஒருபோதும் வற்புறுத்துவதில்லை. அவர் நமக்கு திட்டமிட்டவைகளை, நம் சுய சித்தத்தின்படியே நாம் தெரிந்தெடுக்க விரும்புகிறார்.

இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய கர்த்தர், தம்மை நாம் நேசிக்கவும், அறிந்து கொள்ளவும் நமக்கு சுதந்திரம் கொடுத்திருக்கிறார். அவர் நம்மை எவ்வளவாய் நேசிக்கிறார்

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி!



**கிறிஸ்தவ யூடியூப் சானல்!**

*போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன் நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!*

**5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!**

**தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு**

**தினந்தோறும் - காலை 5.00 மணிக்கு**

**தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு**

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...





**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**CHIEF EDITOR**

Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**ADMINISTRATION**

Bro. N. Prakasam, M.A., General Manager
Dr. Rabinder Boaz, M.S.
Bro. K. Puratchivendan

**EDITORIAL BOARD**

Sis. Jesy Veena Sam
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Dr. A. Richard Samuel, M.A., Ph.D.
Rev. Dr. K.R. Rajasekaran



**EDITOR, PUBLISHER & PRINTER**

Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858

**E.mail ID**

sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**

www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**

Echo of His Call


**"... ... தம்முடைய வாக்கினால் சொன்னதைத் தம்முடைய கரத்தினால் நிறைவேற்றினார்." – 1 இராஜாக்கள் 8:15**

கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே,

ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம்.

கடந்த மாத **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையைப் படித்தவர்கள் எங்களுக்கு அனுப்பிய நல்ல பதில்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம். இதயப்பூர்வமாக எங்களை நேசித்து **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை மற்றும் அதனைச் சார்ந்த இதர ஊழியங்களனைத்தையும், ஜெபத்தாலும், நல் ஆலோசனைகளாலும் தாங்கி வருகிற தேவ மக்களுக்கு எங்கள் தாழ்மையான நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

உங்கள் மின் அஞ்சல் குறியீட்டை (E.mail ID) அனுப்பும்படி நாங்கள் கேட்டிருந்தோம். அதன்படி மின் அஞ்சல் குறியீட்டை (E.mail ID) அனுப்பியவர்களுக்கு இனிமேல் உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கும் அழைப்பின் எதிரொலி பத்திரிகையை அனுப்புவோம். மேலும் நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 வெவ்வேறு மொழிகளிலும் குறிப்பிட்ட தேதிகளில் வெளியானவுடன் விசேஷமாக நம்முடைய வெப்சைட் (Website) www.echoofhiscall.org–லும் பதிவேற்றம் (upload) செய்யப்படுகின்றன. நீங்கள் நேரடியாக வாசிக்கலாம். அல்லது பதிவிறக்கம் (Download) செய்து நகல் எடுத்துக் கொள்ளலாம். கவலையே வேண்டாம். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் தொடர்ந்து மூன்று விதங்களிலும் உங்களுக்குக் கிடைக்கும்.

சர்வதேச வாலிபர் மற்றும் குழந்தைகளுக்காக தினமும் இரவு 10.00 மணிக்கு நாம் எல்லாரும் ஏறெடுத்து வரும் ஜெபத்திற்கு வாசகர்களின் நல்வரவேற்பும், கர்த்தரிடமிருந்து நமது ஜெபங்களுக்கான பதில்களும் கிடைக்கின்றன. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

நாங்கள் மிகவும் வேகமாகவும், சுறுசுறுப்புடனும் செயல்படுகிறோம். கடந்த மே மாதம் சிறுவர்களுக்கான விடுமுறை வேதாகம வகுப்புகள் முடிந்தன. ஜூன் மாதம் 3–ம் தேதி நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரி**யின் பட்டமளிப்பு விழா சிறப்புடன் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து ஜூன் 5ம் தேதி ஆரம்பித்துள்ள 2023–24ம் கல்வி ஆண்டிற்கான **நெகேமியா வேதாகமக் கல்லூரி** மற்றும் **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**யின் வகுப்புகள் சீராகவும், திறம்படவும் அமைய ஜெபியுங்கள். எங்களுக்காக ஜெபியுங்கள்.

நமது யூடியூப் மூலம் 5 நிமிட அதிகாலை செய்திகள் தினமும் காலை 5.00 மணிக்கு ஆங்கிலம், இந்தி, தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் வெளியாகின்றன. 98410 71858 என்ற நமது செல் நம்பரை உங்கள் செல்போனில் பதிவு செய்யுங்கள். இவ்வூழியம் சம்பந்தமாக எங்கள் அறிவிப்புகளைப் பெற இது உதவும். மட்டுமின்றி நம் **Echo of His Call** யூடியூப் சானலை Subscribe பண்ணிக் கொள்ளுங்கள்.

காலம் தொழில்நுட்பத்துக்குள் வேகமாய்க் கடந்து செல்வதால் நாம் விரும்பினாலும், விரும்பா விட்டாலும் அதனுடன் ஓட வேண்டியிருக்கிறது. எப்படியாவது சுவிசேஷம் எல்லா மக்களுக்கும் சென்று சேரட்டும். தேவ நாமம் மகிமைப்படட்டும். ஆமென்.

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**

(+91) 98412 71858 / 98410 71858, மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

**Our Ministries:** ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ◌ BIBLECOR - Postal Courses (3 languages) ◌ Media Ministry ◌ Online Courses ◌ Theological Correspondence Courses (2 languages) ◌ Church Planting ◌ Nehemiah Bible Colleges ◌ Gospel Printing Press ◌ Great Commission Partners ◌ St. Paul's Matriculation School ◌ Crusades ◌ Community Development

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

என்பது இதனால் தெரிகிறது. எந்த சூழ்நிலையிலும் அவரை நாம் தெரிந்தெடுக்க, நமது சர்வ வல்லமையுள்ள தேவன் நம்மை வற்புறுத்துவதே இல்லை. மனித குலத்தோடு அவர் உறவு வைத்துக் கொள்ள அவர் விரும்பினாலும், அதை அவர் நம்மேல் திணிக்க விரும்புவதில்லை. நாம் அவரை இன்னும் அதிகமாய் அறிந்து கொள்ள பொறுமையுடன் அவர் காத்திருக்கிறார்.

**தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்** என்று வேதாகமம் யாக்கோபு 4:8 இல் குறிப்பிடுகிறது, அதே சமயத்தில், **நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்;** என்று யோவான் 15:16 இல் வாசிக்கலாம். அவர்தான் நம்மேல் முதலாவதாக அன்பு வைத்தார்: **அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் ...** 1 யோவான் 4:19. அவரை நாம் தெரிந்து கொள்ளவோ அல்லது நேசிக்கவோ எப்போதும் தேவன் நம்மை வற்புறுத்துவதே இல்லை. ஒரு பொறுமையுள்ள தேவனாக இருந்து நமக்கு 'சுயசித்தம்' என்ற ஒன்றை நமக்கு அருளியிருக்கிறார். வாய்ப்பு எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது; கொடுத்த வாய்ப்பை ஒரு சிலர்தான் ஏற்றுக் கொண்டு பயன்படுத்துகிறார்கள்.

வேதாகமத்தின் சில பிரபலமான நபர்களின் தெரிந்தெடுப்புகளைப் பற்றி நாம் தியானிக்கலாம்.

## இரண்டு குற்றவாளிகள்!

இயேசு கிறிஸ்துவின் சிலுவைக்கு இரண்டு பக்கங்களிலும் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த இரண்டு குற்றவாளிகளில் ஒருவன், **இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்** லூக்கா 23:42. **இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் . . .** லூக்கா 23:43 என்றார். ஆனால் மற்ற குற்றவாளியோ தன் வாழ்க்கையின் கடைசி நிமிடத்திலும் இயேசு கிறிஸ்துவை இகழவே தீர்மானித்தான். ஒரு குற்றவாளி மனந்திரும்பி இயேசு தன்னை நினைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். மற்றவனோ தனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பை நழுவ விட்டு இயேசு கிறிஸ்துவிடம் குற்றம் கண்டுபிடித்து, அவரையே பழி சாற்றிக் கொண்டிருந்தான். இருவரும் வெவ்வேறானதைத் தெரிந்து கொண்டார்கள். யாரும் அதை அவர்கள்மேல் திணிக்கவில்லை. தன்னை இயேசு நினைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பியது அந்த குற்றவாளிக்கு அவன் வாழ்க்கையை மாற்றும் தெரிந்தெடுப்பாக / தருணமாக அமைந்தது. அந்த தருணம் அவனுக்கு மட்டும் வரவில்லை நமக்கும் வந்துள்ளது. எனவேதான் இந்த 2023 ஆம் ஆண்டில் அவரைப் பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கிறோம்.

## நூற்றுக்கு அதிபதி!

தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதையும், அவரது கொடுமை நிறைந்த மரணத்தையும் நேரில் கண்ட பல நூற்றுக்கு அதிபதிகள் பணியின் நிமித்தமாக அந்நாளில் அங்கு இருந்தனர். இயேசு வித்தியாசமானவராக இருந்ததை அவர்கள் கண்டனர். ஆனால், அவர்களில் ஒரு மனிதனைத் தவிர, மற்ற அதிபதிகள் ஒருவரும் இயேசுவை ஏற்றுக்



கொள்ளவோ, அவரே ஆண்டவர் என்றோ அறிக்கை செய்ய முன் வரவில்லை. இயேசு கிறிஸ்துவின் காலின் கீழ் ஒரு நூற்றுக்கு அதிபதி நின்று, கல்வாரி மலைமேல் இயேசுவை ஆணிகளால் அறைவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். ... **மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றான்.** (மத்தேயு 27:54)." இயேசு யார் என்பதை வெளிப்படையாக அவன் அறிக்கை செய்தான். அந்த ஒரு அறிக்கையைச் செய்ய அதிக தைரியம் தேவை.

இன்றைய நாட்களிலும் அநேக சகோதர, சகோதரிகள் தங்களுடைய விசுவாசத்திற்காக துன்புறுத்தப்பட்டும், அவமானப்படுத்தப்பட்டும், சிறையிலடைக்கப்பட்டும், நிர்வாணமாக்கப்பட்டும், தங்கள் சொந்த ஜனத்தாலேயே வெட்கப்படுத்தப்பட்டும், நெருப்பில் எரிக்கப்பட்டும், அநேக வயதில் மூத்தவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டும் இருக்கிறார்கள். இவை எல்லாவற்றையும் சகித்து அவர்கள் தங்களின் விசுவாச சோதனையில் ஜெயித்திருக்கிறார்கள். **கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?** ரோமர் 8:36 இவ்வாறு கூறின பவுலை, 'இப்படிச் சொல்' என்று ஒருவரும் நிர்பந்திக்கவில்லை. அவரே இதைத் தெரிந்தெடுத்தார்.

## பிலாத்து!

இயேசு கிறிஸ்துவுக்காக தன் வாழ்க்கையையே மாற்றக் கூடிய மகா வல்லமை பெற்ற இன்னொரு மனிதன்தான் பிலாத்து. ஆனால் மக்களின் ஆதரவைப் பெறவும், யூதர்களிடமிருந்து நல்ல பெயரை எடுக்கும்படிக்கும் அவன் செய்ய வேண்டியதை அவன் செய்யவில்லை. **நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும் போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே.** நீதிமொழிகள் 3:27. **ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்.** கலாத்தியர் 6:10. நன்மை செய்ய நமக்கு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. நாம் பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்று பரிசுத்த வேதாகமம் நமக்குக் கற்றுக் கொடுக்கிறது. இந்த செயலை நாமே தெரிந்து கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் உடைக்கப்பட்டவர்கள், தேவையுள்ளவர்கள், உதவியற்றவர்கள், பெலனற்றவர்கள், தங்க வீடில்லாதவர்கள், மாற்றுத் திறனாளிகள் போன்ற மக்களுக்கு உதவி செய்யும் விதத்தில் உங்களை தேவன் நல்ல நிலையில் வைத்திருப்பாரானால், அவர்களுக்கு உதவி செய்ய நீங்களாகவே முன் வாருங்கள். நல்ல காரியங்களுக்காக போராடி வெற்றி பெறும் வெற்றியாளர்கள் நமக்குத் தேவை. பெலவீனர்களையும்,



வியாதியஸ்தர்களையும் காக்கவும், அவர்களுக்கு உதவி செய்யவும் அன்னை தெரசா என்ற அற்புதமான பெண்மணி தன் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்தார்கள். ஏமி கார்மைக்கேல் என்ற பெண்மணி வாலிப பெண்களுக்காகப் போராடி வெற்றிப் பெற்றார்கள். சமுதாயத்தில் பெலவீனப்பட்டு முடங்கிக் கிடந்த மக்களுக்காக அவர்களால் இயன்றதை அவர்கள் செய்தார்கள். ஆனால், இன்று மக்கள் தங்களைப் பற்றி மட்டும் சிந்தித்து, தங்களது சகோதர, சகோதரிகளுக்கு உதவி செய்ய நேரமில்லாமல் இருப்பதைக் காண மிகவும் கவலையாக இருக்கிறது. இத்தகைய மக்களை சபையில் பார்ப்பது மிகவும் வேதனைக்குரியதாய் இருக்கிறது. இந்த நிலைமையை மாற்ற தேவன் நமக்கு கிருபை அளிப்பாராக! நாமே அந்த மாற்றமாகக் காணப்படுவோம்!

இயேசு கிறிஸ்து குற்றமற்றவர் என்று பிலாத்து அறிந்திருந்தான். அவரை விடுவிக்க அவனால் கூடுமாயிருந்தது. அதன் உண்மையாகவே இயேசு கிறிஸ்துவை விடுவிக்க விரும்பினான். ஆனால், அதை அவன் வெளிப்படையாகச் செய்ய விரும்பவில்லை. மக்களே அந்த முடிவைத் தெரிந்தெடுக்கப்படும் என்று பரபாஸ் என்ற கள்வனையும், இயேசு கிறிதுவையும் மக்கள் முன் வைத்து அவர்களே தெரிந்து கொள்ளட்டும் என்று வகை பண்ணினான். இயேசு கிறிஸ்துவை விடுவிக்க மக்கள் கேட்பார்கள் என்று எதிர்பார்த்தான். ஆனால், அவர்கள் பரபாஸை விடுவிக்கக் கேட்டுக் கொண்டார்கள். ஒரு அருமையான வாய்ப்பை பிலாத்து இழந்து விட்டான். ஆனால், யூதர்களோ தவறான நோக்கத்திற்காக அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார்கள். தவறவிட்ட வாய்ப்புகள்!!

நாம் தெரிந்தெடுக்க வாய்ப்பு பெற்றும், நம்மில் எத்தனை பேர் வாய்ப்புகளைத் தவறவிட்டிருக்கிறோம்? பரவாயில்லை. நமக்காக இரண்டாம் வாய்ப்பை அருளும் கிருபையுள்ள தேவன் நமக்கிருக்கிறார். அதையும் தவற விட்டாலும், ஒரு தெய்வீகத் திட்டத்துடன் நம் தேவன் மீண்டும் நம்மிடம் வருகிறார். இதுவே தேவ அன்பு! ஒருவேளை நீங்கள் அமர்ந்து கொண்டு இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கலாம்: "என் கடந்த காலத்தில் இதைச் செய்திருக்கலாமே, அதைச் செய்திருக்கலாமே. இப்போது எனக்கு வயதாகி விட்டதே. பெலனும் ஒடுங்கி விட்டது. எத்தனை வருடங்களை வீணாக்கிவிட்டேன்!"

அன்பு சகோதர, சகோதரிகளே, நீங்கள் ஒருவேளை உங்கள் நேரங்களை வீணாக்கி விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கலாம். இனிமேல் இதையெல்லாம் செய்ய காலதாமதமாகி விட்டது என்று நினைக்கலாம். ஆனால் தேவனுடைய ராஜ்யத்தில் 'தாமதம்' என்ற ஒன்று இல்லவே இல்லை. தேவனது நேரம் மிகச் சரியானது! மோசேயை அவனது 40 ஆவது வயதில் பயன்படுத்த தேவன் விரும்பவில்லை. மாறாக அவனது 80 ஆவது வயதில்தான் தேவன் அவனைப் பயன்படுத்த விரும்பினார். காலேபுக்கு தனது 80ஆவது வயதில் யுத்தம் செய்து எதிரியை மேற்கொள்ள பெலனிருந்தது. நீங்கள் வீணாக்கின வருடங்களை இயேசு கிறிஸ்துவிடம் ஒப்படைத்து விடுங்கள். அதை அழகானதாக அவர் மாற்றிவிடுவார். ஒரு பழைய பாடல் ஒன்று என் நினைவுக்கு வருகிறது:

"அனைத்தையும் இயேசுவிடம் கொடுத்துவிடு. கலைக்கப்பட்ட கனவுகள், காயப்பட்ட இருதயம், உடைந்த பொம்மைகள்...

அனைத்தையும் இயேசுவிடம் கொடுத்துவிடு. உங்கள் துக்கங்களை சந்தோஷமாக அவர் மாற்றுவார்"

அவை அனைத்தையும் இயேசுவிடம் கொடுத்துவிட நாம் கற்றுக் கொள்வோம்.

## பேதுரு !

முதலாவதாக இயேசு கிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப்பட்ட சீஷர்களில் பேதுருவும் ஒருவர். மூன்று சீஷர்கள் இயேசுவின் நெருங்கிய வட்டத்திற்குள் இருந்தார்கள். அதில் பேதுருவும் ஒருவர். இயேசு கிறிஸ்துவின் வாழ்வின் முக்கிய நேரங்களில் எல்லாம் பேதுரு, இயேசுவோடு இருந்தார். மறுரூப மலையில் இயேசு யார் என்பதை அவர் தன் கண்களாலேயே கண்டார்.

பேதுருவின் குணாதிசயத்தை நான் மிகவும் விரும்புவதுண்டு! அவர் இயேசுவுக்காக அதிக வாஞ்சையும், வைராக்கியமும் கொண்டிருந்தார். மறுரூப மலையிலே இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமும் கட்ட அவர் விரும்பினார். இயேசு தமது

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....


# நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.

வேளச்சேரி – முழுநேரம் – இந்தி
சேப்பாக்கம் – மாலை நேரம் – தமிழ்
(திங்கள், செவ்வாய், வியாழன்)

*Registered Candidate for Membership*
Asia Theological Association (ATA)

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.**

Certificate in Theology : ஒரு வருடம்
Diploma in Theology : இரண்டு வருடங்கள்

**கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**

**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2023 ஜூலை 19 முதல் ஆகஸ்ட் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஜூலை 19 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழி வேதாகமக்கல்வி** ஆகியவற்றின் செயல்பாடுகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூலை 20 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூலை 21 ⇨ **நெகேமியா வேதாகமக்கல்லூரி**யின் முழுநேர மற்றும் மாலைநேரக் கல்விகளுக்கான புதிய மாணவர்களை கொடுத்ததற்காக...

ஜூலை 22 ⇨ நமது மிஷனரி ஊழியர்களின் பெரிதான அர்ப்பணிப்பிற்காக...

ஜூலை 23 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூலை 24 ⇨ நமது தலைமை மற்றும் கிளைச்சபைகளின் போதகர்கள் மற்றும் மூத்த உறுப்பினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூலை 25 ⇨ நமது சுவிசேஷ அச்சகத்தின் தங்குதடையற்ற இயக்கத்திற்காகவும், அதன் திறமையான ஊழியர்களுக்காகவும்...

ஜூலை 26 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை ஊழியத்தினை 1969 முதல் ஆசீர்வதித்து வருகிறதற்காக....

ஜூலை 27 ⇨ நமது தலைமைச் சபைக்கு புது உத்வேகமுள்ள விசுவாசிகளை கொடுத்து ஆசீர்வதித்ததற்காக...

ஜூலை 28 ⇨ ஞாயிறுதோறும் பாலாஜி நகர், சந்தோஷபுரம் மற்றும் வேளச்சேரியில் நிகழ்த்தப்படும் சபை ஆராதனைகளுக்கு வரும் புது விசுவாசிகளுக்காக...

ஜூலை 29 ⇨ 2023–2024 கல்வி ஆண்டுக்கான நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** மாணவர் சேர்க்கைகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூலை 30 ⇨ நமது **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசன ஊழியத்தை** ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூலை 31 ⇨ சந்திக்கப்படாத மக்களை சென்றடையும் **அழைப்பின் எதிரொலி** யூடியூப்பின் 5 நிமிட செய்திகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஆகஸ்ட் 01 ⇨ சந்திக்கப்படாத மக்களை சுவிசேஷம் சென்றடையச் செய்த கிருபைக்காக...

ஆகஸ்ட் 02 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு** அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவ ஆசிரியைகள் மற்றும் பள்ளி முதல்வரை தந்து ஆசீர்வதித்த கிருபைக்காக...

ஆகஸ்ட் 03 ⇨ நமது அனைத்து சபை போதகர்கள் மற்றும் ஊழியர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

ஆகஸ்ட் 04 ⇨ தேவனின் கிருபை மீண்டும் ஒருமுறை மக்களின்மேல் பொழியப்பட வேண்டி...

ஆகஸ்ட் 05 ⇨ வேனிற்கால விடுமுறை வேதாகமப் பள்ளிகள் மூலமாக ஆண்டவரால் தொடப்பட்ட நூற்றுக்கணக்கான சிறுவர்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந்து சபைக்கு தொடர்ந்து வர வேண்டி ...

ஆகஸ்ட் 06 ⇨ கிறிஸ்தவ ஊழியர்கள் மற்றும் மிஷனரிகள் மீதான வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டி ...

ஆகஸ்ட் 07 ⇨ உலகமெங்கும் உள்ள கொரோனா வைரஸ் முற்றிலுமாக நீங்க ...

ஆகஸ்ட் 08 ⇨ கர்த்தர் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களில் அர்ப்பணிப்புடன்குடும்பங்களில் சமாதான குலைச்சல்களை ஏற்படுத்தும் சாத்தானின் தந்திர நடவடிக்கைகளை நிர்மூலமாக்க வேண்டி...

ஆகஸ்ட் 09 ⇨ தேவ பிள்ளைகள்மேல் ஆவிக்குரிய மற்றும் உலகத்திற்குரிய ஆசீர்வாதங்கள் பொழியப்பட வேண்டி...

ஆகஸ்ட் 10 ⇨ இன்று 55–வது வருடத்திற்குள் அடியெடுத்து வைக்கும் நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களுக்காக...

ஆகஸ்ட் 11 ⇨ உலகத்தில் நிலவி வரும் பொருளாதார மந்தநிலை முடிவுக்கு வரவேண்டி...

ஆகஸ்ட் 12 ⇨ நமது ஊழியங்களின் பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட வேண்டி...

ஆகஸ்ட் 13 ⇨ உலகமனைத்திலும் உள்ள மக்களின் தேவைகள் சந்திக்கப்பட...

ஆகஸ்ட் 14 ⇨ பெங்காலி பத்திரிகை வெளிவருவதில் உறுதுணையாக இருக்கும் சகோ. இந்திரஜித் ராய் அவர்களின் உடல்நலம் விரைவில் குணமடைய வேண்டி...

ஆகஸ்ட் 15 ⇨ நமது ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் உடல்நலத்திற்காக...

ஆகஸ்ட் 16 ⇨ நமது ஊடக ஊழியங்களின் மூலம் அதிகாலை 5.00 மணியளவில் யூடியூபில் ஒளிப்பரப்பாகும் 5 நிமிட தேவசெய்திகளுக்காக...

ஆகஸ்ட் 17 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வராஜ் அவர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் அனைத்து தீய சக்திகளிடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டி...

ஆகஸ்ட் 18 ⇨ நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரியின்** நூலக புத்தகங்கள் KOHA software-ன் மூலமாக பதிவேற்றப்படுவதற்காக...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

கொடூர மரணத்தைப் பற்றி பேசினபோது, பேதுருதான் உணர்ச்சி வசப்பட்டு முதலாவதாகப் பேசினார்: ... **ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்.** லூக்கா 22:33. இயேசுவைப் பாதுகாப்பதில் அதிக அக்கறையுடையவரும், கோபம் கொண்டவருமாயிருந்தார். இயேசு கிறிஸ்துவைக் கைது செய்ய சேவகர்கள் வந்தபோது, அவர் கோபம்கொண்டு, ஒரு சேவகனின் காதை வெட்டி விட்டார். எல்லா நிலைகளிலும் பேதுரு உணர்ச்சிவசப்படுபவர், நாமும் அதுபோலதான். எல்லாவற்றிலும் முதன்மையாக இருக்க விரும்பினார்; செயலூக்கமுடையவராகவும் இருந்தார்.

மக்களோடு இணைந்து அவர்கள் மேல் அக்கறை உள்ளவராயிருந்தார் பேதுரு. தன் சகோதரனாகிய அந்திரேயாவுடன் அவர் நல்ல உறவில் இருந்ததால்தான், இயேசு கிறிஸ்துவை சந்திக்க அந்திரேயா அழைத்த போது, உடனேயே ஒத்துக் கொண்டார். ஆனால் அவர்களுக்குள்ளே சகோதர போட்டியும் இருந்திருக்கும் என்று நம்புகிறேன். பேதுருவின் மாமியின் சுகவீனத்தைக் குறித்தும் நாம் வாசிக்கிறோம். அவர் தனது குடும்பத்துடனும் நல்ல உறவில் இருந்தார் என்று புரிந்து கொள்ளலாம். எதற்கும் ஒரு நோக்கமுள்ளவராக இருந்தார். இயேசு கிறிஸ்து யார் என்பதில் சரியான தெளிவு பெற்றிருந்தார். அவர்கள் எதிர்பார்த்த மேசியா இயேசுவே என்று இயேசுவை அடையாளம் கண்டிருந்தார். அவரது ஊழியத்திலே இந்த குணாதிசயங்களைப் பின்பு நாம் காணலாம்.

இருப்பினும், இத்தகைய அர்ப்பணிப்பும், அன்பும், வாஞ்சையும், மக்கள் நேசமும், இயேசு கிறிஸ்துவை மிக உயர்ந்த நிலையில் வைத்து கனப்படுத்திய பேதுரு, எப்படி இயேசு கிறிஸ்துவை திடீரென்று மறுதலித்தார்? ஒரு முறை மட்டுமல்ல. மூன்று முறை மறுதலித்தார். கர்த்தர் பேதுருவை ஏற்கனவே எச்சரித்திருந்தும் ஏன் அப்படி அவர் செய்தார்? மறுதலித்தது மட்டுமல்லாமல், சபிக்கவும் தொடங்கினார். இதை வாசிக்கும்போது, பேதுருவை நியாயம் தீர்த்து, இவர் ஒரு பயங்கர மோசமான மனிதர் என்று தீர்மானித்து விடுவோம். ஆனால் ஒன்றை நாம் சிந்திக்க வேண்டும். அர்ப்பணிக்கப்பட்ட, கிறிஸ்துவைப் பின்பற்றும் நாம் எத்தனை முறை நமது கிரியைகள், வார்த்தைகள், சிந்தனைகள் போன்றவற்றில் இயேசு கிறிஸ்துவை மறுதலித்திருக்கிறோம்? பலர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்: "திடீரென்று ஒரு தருணத்தில் நான் தவறிவிட்டேன்." இந்த மகா பெரிய அப்போஸ்தலராகிய பேதுருவை நாம் குறை சொல்பவர்களாய்க் காணப்படாமல், அவரது வாழ்க்கையிலிருந்து பல பாடங்களை நாம் கற்றுக் கொள்ள வேண்டும் என நான் விரும்புகிறேன்.

பேதுரு செய்தது ஒரு 'தருணத்தில்' தவறிச்செய்ததா அல்லது சில காலமாகவே அவருக்குள் நடந்த கிரியையின் விளைவா?

ஒரு அர்ப்பணிக்கப்பட்ட, அன்பு நிறைந்த, வாஞ்சையுடைய, நோக்கத்துடன் வாழ்ந்த பேதுருவால் இயேசுவை மறுதலிப்பது லேசான காரியம் அல்ல என்றே நான் நம்புகிறேன். எப்போது அவரது பின்மாற்றம் தொடங்கியது? மத்தேயு 26:58 இல் குறிப்பிட்டுள்ளது போல, பேதுரு இயேசுவை **தூரத்தில்** பின்பற்றத் தொடங்கியதிலிருந்துதான் இச்செயல் அவருக்குள் நடக்க ஆரம்பித்தது.

பேதுரு இயேசுவை தூரத்திலே பின் சென்றார் என்று வேதாகமம் அழகாகக் குறிப்பிடுகிறது. நம்மில் பலரும், இயேசு கிறிஸ்துவை நேசிக்கிறோம்; அவரது ஆசீர்வாதங்களை அனுபவிக்கிறோம்; இயேசு 'நம் தேவைகளைச் சந்திக்கிறவர்' என்றும் அவர் நம்மைப் 'பாதுகாக்கிறவர்' என்றும் அறிகிறோம். ஆனால் அவரோடு நெருங்கி வர தயங்கி, 'தூரத்தில்' அவரைப் பின்பற்றுவதில் நாம் திருப்தி அடைந்து விடுகிறோம். அவரை 'தூரத்தில்' பின்பற்றுவதினால் நமக்கு நல்லது என்று நம்மில் சிலர் உணர்கிறோம். ஏனென்றால் அவர் நம்மிடத்தில் அதிகமாக எதையும் கேட்க மாட்டார் என்று கருதுகிறோம். நாம் இயேசுவை முழுமையாகப் பின்பற்றுபவர்கள் என்று உலக மக்களால் அறியப்படவில்லை என்றால், நாம் உலகத்தையும் அனுபவித்து, இயேசுவின் அன்பையும் அனுபவித்து வாழலாம் என்று நினைக்கிறோம். இது ஒரு வகையில் சுவாரசியமான சமரசம் அல்லவா?

அன்பு நண்பர்களே! உலகத்திற்கு நண்பர்களாக இருந்து, தேவனுக்கும் நண்பர்களாக நாம் இருக்க முடியாது என்று வேதாகமம் நமக்கு போதிக்கிறது.

**விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா?** யாக்கோபு 4:4 இவ்விரண்டுக்கும் நடுவில் நாமிருக்க முடியாது. தேவன் பக்கம் நாமிருக்க வேண்டும், அல்லது உலகத்தின் பக்கம் இருக்க வேண்டும். தேவனது பக்கத்தில் நாம் இல்லை என்றால், இயற்கையாகவே நாம் தேவனுக்கு விரோதியாக இருக்கிறோம் என்று பொருளாகிறது. நீங்கள் எவ்வளவு ஆவிக்குரிய அல்லது பக்தியுள்ள நபராக

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....

கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்;
இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம் – சங்கீதம் 126:3.

அழைப்பின் எதிரொலி
ஊழியங்களின்
55வது ஆண்டு விழா
(1969 - 2023)

ECHO OF HIS CALL 1969-2019
REACHING NATIONS

இடம் :
அழைப்பின் எதிரொலி
10, முகமது அப்துல்லா 2–வது தெரு,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

11.08.2023, வெள்ளிக்கிழமை
12.08.2023, சனிக்கிழமை
13.08.2023, ஞாயிற்றுக்கிழமை
ஆகிய தினங்களில் சிறப்பு நிகழ்ச்சிகள்

சிறப்பு செய்தி:
சகோதரி ஏஞ்சலின் செல்வகுமாரி அவர்கள்

தயவு செய்து ஜெபித்துக் கொள்ளவும்.

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், (+91) 98410 71852

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

| | | |
|---|---|---|
| 1. ஜெப உதவி | – | 24 மணி நேரம் |
| 2. வேதாகமக் கடித முறைக் கல்வி | – | தமிழ், ஆங்கிலம், இந்தி |
| 3. அழைப்பின் எதிரொலி | – | பத்திரிகைகள் (16 மொழிகள்) |
| தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒரியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகன். | | |
| 4. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் | – | (இரு இடங்களில்) மாலை நேரம் / முழு நேரம் |
| 5. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | | |
| 6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்) | | |
| 7. பயிற்சி வகுப்புகள் | | |
| 8. சுவிசேஷக் கூட்டங்கள் | | |
| 9. கைப்பிரதி விநியோகம் | – | தொடர் ஊழியம் |
| 10. சுவிசேஷ அச்சகம் | – | சுவிசேஷ பிரசுரங்கள் |
| 11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி | | |
| 12. சிறுவர் வேத பாடசாலை | – | ஞாயிறு காலை 8.30 மணி மாலை 4.00 மணி |
| 13. தமிழ் ஆராதனைகள் | – | ஞாயிறு காலை 8.00 மணி & 10.00 மணி |
| 14. இந்தி ஆராதனை | – | ஞாயிறு மாலை 4.00 மணி |
| 15. தெலுங்கு ஆராதனை | – | ஞாயிறு மாலை 5.00 மணி |
| 16. தமிழ் – ஆங்கிலம் ஆராதனை | – | ஞாயிறு மாலை 6.00 மணி |
| 17. போதகர் ஆலோசனைக் கூட்டம் | – | ஞாயிறு மாலை 4.00 மணி |
| 18. பெண்கள் ஆராதனை | – | புதன் மாலை 5.30 மணி |
| 19. இறையியல் கல்வி | – | புதன் மாலை 6.30 மணி |
| 20. ஆண்கள் ஆராதனை | – | வெள்ளி இரவு 7.00 மணி |
| 21. சீஷத்துவக் கூட்டம் | – | சனி மாலை 6.00 மணி |
| 22. வீட்டுக் கூட்டங்கள் | – | செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி |
| 23. விசேஷ திருவிருந்து | – | பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி |
| 24. ஊழியர்கள் கூடுகை | – | முதல் சனிக்கிழமை மாலை 5.30 மணி |
| 25. பெற்றோர் ஜெபம் | – | முதல் ஞாயிறு மாலை 4. 00 மணி |
| 26. இரவு ஜெபம் | – | 2–ம் வெள்ளி இரவு 9.30 மணி |
| 27. உபவாச ஜெபம் | – | மூன்றாம் சனிக்கிழமை காலை 9.30 மணி |
| 28. திருவிருந்து | – | 2–ம் ஞாயிறு ஆராதனைகள் |
| 29. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் | – | தினமும் இரவு 10.00 மணி |
| 30. ஊழியர் ஜெபம் | – | தினமும் காலை 9.00 மணி |
| 31. அலுவலகம் | – | தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர) |

# அழைப்பின் எதிரொலி
## தபால் வழிக் கல்வி
### இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி
### பத்திரிகையை
### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல் வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!

## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

## தேவனுடைய வழிநடத்துதலும், பாதுகாப்பும்!

## HIS GUIDANCE AND PROVIDENCE IN MY LIFE!

அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு,அவர்களை இரட்சிக்கிறார் சங்கீதம் 145 :19

சென்னை, சேப்பாக்கம் என்ற மக்கள் நெருக்கம் நிறைந்த இடத்தில் 1982–ம் ஆண்டு முதல் சபை ஊழியம் ஆரம்பிக்க தேவன் எனக்கு உதவி செய்தார். அதுமுதல் அப்பகுதியில் உள்ள பல கட்டிடங்களுக்கு ஆராதனை ஸ்தலத்தை மாற்ற வேண்டியதாயிற்று. இதற்கு பொருளாதாரக் கஷ்டங்களும், பலருடைய எதிர்ப்புகளும், பொறாமைகளுமே காரணங்களாயிருந்தன.

கடைசியில் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள சி.என். கிருஷ்ணசாமி சாலையில் உள்ள திரு. ஜார்ஜ் அவர்களுடைய ஓர் தேநீர் விடுதிக்கு உட்பகுதியில், காற்று வசதியற்ற ஓர் அறையில் ஞாயிறு ஆராதனைகளை நடத்திக் கொண்டு வந்தோம்.

அப்போது ஒரு ஞாயிறு ஆராதனையின்போது தேவ ஆவியானவர் அந்த சேப்பாக்கம் பகுதியில் ஓர் மிகவும் வசதியான ஆராதனை ஸ்தலத்தை தேவன் தரப்போவதாக என் உள்ளத்தில் விசுவாசிக்க ஏவினார். இதற்காக, சபையாக ஊக்கமாக ஜெபிக்க வேண்டும் என்றும், அதை சபை மக்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் நான் விரும்பி, இந்தக் காரியத்தை அப்படியே சபை மக்களுக்கு அறிவித்தேன்.

- இதை கேட்டவுடனே சபை மக்கள் தங்கள் கடைக் கண் பார்வைகளால் என்னைப் பரிகசித்தனர்.
- நம்முடைய பொருளாதார நிலையின் அடிப்படையில் சேப்பாக்கம் பகுதியில் இடம் வாங்க முடியுமா ? என்று பலர் கேள்வி கேட்டனர்.
- அப்படி பணம் இருந்தாலும், சேப்பாக்கம் பகுதியில் எங்கே விற்பனைக்கு இடம் இருக்கிறது ? என்று என்னைப் பலர் விசுவாச நெருக்கடி நிலைக்கு உட்படுத்தினர்.
- கர்த்தருடைய பெயரைச் சொல்லி இப்படி நடக்க முடியாத காரியங்களைச் சொல்லலாமா ? என்று பலர் சந்தேகப்பட்டனர்.

இதுபோல் பல குழப்பமான சூழ்நிலைக்கு நான் தள்ளப்பட்டேன். இந்த விசுவாச சவாலை ஏற்கவும், என்னுடன் நிற்கவும் யாரும் முன்வரவில்லை.

“கிறிஸ்தவ ஊழியர்களுக்கு வேறு வேலை இல்லை. எனவே, இப்படித்தான் எதையாவது சொல்லிக் கொண்டிருப்பார்கள்” என்று பொதுவாக என்னை மக்கள் அங்கீகரிக்கவில்லை.

ஆனால் நான் மனம் தளரவில்லை. மாறாக, **விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசு கிறிஸ்து**வின்மேல் (எபிரேயர்12:1) முழுமையாகச் சார்ந்து கொண்டேன். அப்போது ஆண்டவர் **யாக்கோபு என்னும் பூச்சியே, இஸ்ரவேலின் சிறு கூட்டமே, பயப்படாதே; நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று கர்த்தரும் இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய உன் மீட்பர் உரைக்கிறார். இதோ, போராடிக்கிறதற்கு நான் உன்னைப் புதிதும் கூர்மையுமான பற்களுள்ள யந்தரமாக்குகிறேன்; நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கிவிடுவாய்.** ஏசாயா 41:14.15 என்ற வசனத்தின்படி என்னைத் தேற்றினார்.

நாட்கள் கடந்தன. எல்லா மக்களுடைய கண்களுக்கும் முன்பாக ஆண்டவர் என்னை ஆசீர்வதித்து, அவருடைய மகாப்பெரியக் கிருபையால் அதே சென்னை, சேப்பாக்கத்தில் தற்போது நாம் பயன்படுத்தும் இடத்தைத் தந்தார்.

இடம் கிடைத்தபின்னர், எனக்குப் பணவுதவி செய்ய முன்வர யாருமே இல்லை. ஆனால், நான் அப்போது அரசாங்கத்தில் பணி புரிந்ததால், அரசாங்கமே எனக்கு இக்கட்டிடத்தை வாங்க முன் பணம் கொடுத்தது. எவ்வளவு ஆச்சரியமான ஆண்டவர் இயேசு கிறிஸ்து. **கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.** சங்கீதம் 34:8.

இந்தச் செய்தியை எழுதும் இந்த நாளில்கூட என் விசுவாச வாழ்க்கையானது மிகவும் கரடுமுரடானதும், சவால் நிறைந்ததுமாய்த்தான் இருக்கிறது.

எந்தவிதமான நிரந்தர வருமானமும், எந்தவிதமான பணபலமும், எந்தவிதமான ஆள்பலமும் இல்லாத மிகவும் நிர்ப்பந்தமான நிலையில்தான் இன்றும் வாழ்கிறேன். எனவே, தேவன் என் கையில் கொடுத்திருக்கும் **அழைப்பின் எதிரொலி**யின் 16 மொழி மாதப் பத்திரிகைகள், 3 மொழி தபாற்கல்வி, **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** பகுதிநேர மற்றும் முழுநேர வேதாகமக் கல்வி, ஞாயிறுதோறும் 7 ஆராதனைகள் நடைபெறும் தலைமைச் சபை ஊழியங்கள், **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** (கிராம உயர்நிலைப்பள்ளி), சுவிசேஷ அச்சகம், சுவிசேஷ ஊழியங்கள் முதலிய எல்லா ஊழியங்களையும் அவற்றின் நிர்வாக அலுவலகங்களையும் நடத்துவதில் சொல்ல முடியாதவைகளும், சொல்லி முடியாதவைகளுமான பல்வேறு கஷ்டங்களும், சவால்களும், தோல்விகளும் எனக்கு உண்டு.

தூங்க முடியாத இரவுகளும், தூக்கம் அற்ற இரவுகளும் என் அனுபவமாக இருக்கின்றன. உண்மையான தேவனுக்கென்று

உழைப்பவர்களுக்கு இந்த உலகமும், உலகமக்களும் கைகொடுக்க மாட்டார்கள் என்பதை நான் கண்கூடாக அனுபவ ரீதியில் காண்கிறேன். காரிருளும், நெருக்கங்களும், நம்பிக்கையற்றதுமான இந்த உலக வாழ்வில் **இயேசு கிறிஸ்து** மட்டுமே உண்மையுள்ளவராக இருக்கிறார் என்பதை ஒவ்வொரு நிமிடமும் நான் கற்று அறிந்து வருகிறேன். ஏனென்றால் அவர்தான் என்னை நடத்துகிறார் என்பதை அனுதினமும் நான் அனுபவிக்கிறேன். கீழ்வரும் பாடல் வரிகள் எனக்கு மிகவும் பொருத்தமும், விருப்பமுமாக இருந்து வருகிறது.

**காரிருளில் என் நேச தீபமே, நடத்துமேன்!**
**வேறொளியில்லை, வீடும் தூரமே, நடத்துமேன்!**
**நீர்த்தாங்கின் தூரக்காட்சி ஆசியேன்;**
**ஓரடி மட்டும் என்முன் காட்டுமே.**

என் அனுதின ஊழிய வாழ்க்கை மிகவும் கடினமானதுதான். ஆனால் என் வேலையை முடித்தபின், என் சொந்த நாட்டுக்கு சென்று, என் சொந்த வீட்டினை சுதந்தரித்து, என் நேசர் **இயேசு கிறிஸ்து**வின் பொன்முகத்தை முத்தம் செய்யும் அந்த நல்ல நாளுக்காக அனுதினமும் காத்திருக்கிறேன். அந்த நாள் நல்ல நாள்! பாக்கிய நாள்!!

நண்பரே, நீங்களும் ஆயத்தமா ?

***

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

இருந்தாலும், இயேசு கிறிஸ்துவை தூரத்தில் பின்பற்ற தீர்மானித்துவிட்டால், நீங்கள் ஆபத்தான இடத்தில் இருக்கிறீர்கள் என்று அறிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் கிறிஸ்துவோடு நடக்கும் நடை இன்று எப்படியிருக்கிறது ? இயேசு கிறிஸ்துவோடு தூரத்தில் நடந்து கொண்டிருக்கிறீர்களா அல்லது இயேசு கிறிஸ்துவோடு நெருங்கி நடக்கிறீர்களா ? எந்த நிலையில் அவரோடு நடக்க வேண்டுமென்று நாம் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டும். ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது போல, இயேசு கிறிஸ்து நம்மை அதிகமாய் நேசிப்பதினால், எதையும் நம்மேல் நிர்பந்திக்க மாட்டார். ஏனென்றால் நமக்கு 'சுயசித்தம்' என்ற ஒன்றைத் தந்திருக்கிறார். இருப்பினும் அவரது விருப்பத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்: "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் (யோவான் 15:7)" தேவனோடு நாம் நெருங்கி நடப்பதன் முக்கியத்துவத்தை இவ்வசனம் நமக்குக் கற்றுக் கொடுக்கிறது.

அன்பு நண்பர்களே, நாம் வாழும் இந்த உலகம், மிகவும் சிக்கல் நிறைந்ததும் சவால் நிறைந்ததுமாயிருக்கிறது. நமது தொழில், குடும்பம், தனிப்பட்ட வாழ்க்கை ஆகிய அனைத்தையும் ஒரே நேரத்தில் சமாளிப்பது ஒரு சவாலாக இன்றும் உள்ளது. சில நேரங்களில் நம் வாழ்வில் சந்திக்கும் ஏமாற்றம், காயம், துரோகம், பிரிவு, மரணம், பின்னிருந்து குத்துதல் போன்றவை மனதில் பெரிய சோர்வை உண்டாக்குகின்றன. இத்தகைய சூழ்நிலையில் உங்களில் எத்தனை பேர் இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. ஒருவேளை நீங்கள் இவ்வாறு கூறலாம்: "வேறொருவர் எடுத்த தீர்மானத்தின் விளைவாக நான் ஒரு வாழ்க்கை வாழ்ந்து வருகிறேன். இது எனக்கேற்ற வாழ்க்கை இல்லை". இத்தகைய காரணத்தினால் நீங்கள் யூதாசைப் போல, இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவதை நிறுத்தியிருக்கலாம். அல்லது பேதுருவைப் போல தூரத்தில் பின்பற்றிக் கொண்டிருக்கலாம். இவ்விரண்டு நிலையுமே ஆபத்தானவை என்று கருத்தில் கொள்ள வேண்டும்.

பேதுரு இயேசு கிறிஸ்துவை மறுதலித்தது திடீரென்று நடந்த ஒரு நிகழ்வு அல்ல. அது கொஞ்சம் கொஞ்சமாக நடந்தது. இயேசு கிறிஸ்துவை கைது செய்தவுடன், தங்களுடைய எதிர்காலம் என்னவாகுமோ என்ற பயம் ஒவ்வொருவரையும் ஆட்கொண்டது. அதே சமயம், தனது தலைவருக்கு என்ன நேரிடுகிறது என்று அறிந்து கொள்ளவும் அவர் விரும்பினார். எனவேதான் அவரை தூரத்தில் பேதுரு பின்பற்றினார்.

பேதுருவைப் போல நீங்களும் இயேசு கிறிஸ்துவை தூரத்தில் பின்பற்றுகிறீர்களா ? "தேவனிடத்தில் நெருங்கி வாழ்ந்தால், அவரும் என்னிடத்தில் அதிகமாய் எதிர்பார்ப்பார். ஆதலால் நான் தூரத்திலேயே இருந்து விடுகிறேன்," என்று நினைக்கிறீர்களா ? நம்மில் சிலர் ஆலயத்திற்குச் செல்வோம். ஆனால், ஆலயக்காரியங்களில் பங்கு பெற மாட்டோம். சிலர் ஆலயத்திற்குப் போகவே விரும்புவதில்லை. ஒரு சிலர் வீட்டிலேயே இருந்து கொண்டு ஜெபித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். நம்மில் சிலர், நமக்கு ஏதாவது தேவை என்றால் மட்டும் இயேசு கிறிஸ்துவிடம் பேசுகிறோம். அல்லாமல், அவருக்காக நம்மால் நேரம் செலவழிக்க முடியவில்லை.

நான் உங்களை உற்சாகப்படுத்த விரும்புகிறேன். இயேசு கிறிஸ்துவை தூரத்திலே பின்பற்றாதீர்கள். அவரை நெருங்கி வாருங்கள். மனிதனை தேவனோடு இணைக்கவே இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வந்தார். அதற்காகவே, அவர் சிலுவையில் மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். நம்பிக்கையற்ற சூழ்நிலையில் நம்பிக்கை கொடுக்கவும், புயல் போன்ற கலக்கத்தின் நேரத்தில் சமாதானம் கொடுக்கவும், நாம் அன்புக்குப் பாத்திரவானல்ல என்று எண்ணும்போதும், தமது அன்பை நம்மேல் செலுத்தவுமே அவர் இவ்வுலகில் வந்தார். **தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி ?** என்று ரோமர் 8:32 இல் எழுதப்பட்டிருக்கிறது. அவரிடத்தில் கேளுங்கள். எல்லா நன்மைகளையும் உங்களுக்குத் தர அவர் சித்தமாயிருக்கிறார்.

ஒவ்வொரு நாளும் அவருடன் பேசுங்கள். அவரது வார்த்தையை வாசியுங்கள். அவருடைய சத்தத்தைக் கேட்கும் அனுபவத்தை நீங்கள் இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை என்றால் இன்றே அவரிடம் கேளுங்கள். "கர்த்தாவே உம்மை நெருக்கமாகப் பின்பற்ற விரும்புகிறேன், தூரத்தில் அல்ல; என்னோடு பேசும் ஆண்டவரே. உம்முடைய சத்தத்தை நான் கேட்கட்டும். உம்முடைய சத்தத்தைக் கேட்க மட்டுமல்லாமல், நீர் சொல்வதற்குக் கீழ்ப்படிய எனக்கு உதவி செய்யும் ஆண்டவரே. ஆமென்."

கர்த்தரோடு தூரத்தில் அல்ல, நெருங்கி நடக்க கர்த்தர்தாமே உங்களுக்கு உதவி செய்வாராக!

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது **அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப்** (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **S. Sam Selva Raj** |
| A/C No. | : **1023 2934 679** |
| IFSC | : **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | |
|---|---|
| Branch | : **Anna Salai, Chennai-6** |
| Name | : **Echo of His Call** |
| A/C No. | : **6038 0502 2319** |
| IFSC | : **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : **1023 2923 805** |
| IFSC | : **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**❋ வருட சந்தா ரூ. 100/–   ❋ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/21-23**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th JUNE 2023**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

***JESUS LOVES YOU!***

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**